பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
15 05 2025 6 45
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நக்சல் பாதிப்பு பகுதிகளில் அமைதியை ஏற்படுத்தவும், வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளவும் அரசு உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதிமன்றம் உத்தரவிட்ட தொகைக்கும் கூடுதலாக, தலா 25 லட்சம் ரூபாய் நிவாரணத் தொகை உயர்த்தி வழங்கப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.
- மாநிலத்தில் கடந்த 4 ஆண்டுகளில் விவசாயிகளுக்கு ஆயிரம் கோடி ரூபாய்க்கும் மேல் கடன் வழங்கப்பட்டுள்ளதாக பால்வளத்துறை அமைச்சர் திரு. மனோ தங்கராஜ் கூறியுள்ளார்.
- நீலகிரி, ஈரோடு உள்ளிட்ட 8 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகளின் பதக்கப்பட்டியலில் தமிழகம் 5ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

நக்சலைட்டுகளுக்கு எதிராக பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் வெற்றி, நக்சல் ஒழிப்புக்கான இயக்கம் சரியான திசையில் சென்றுகொண்டிருப்பதை எடுத்துக்காட்டுவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷாவின் சமூக ஊடக பதிவை பகிர்ந்துள்ள அவர், நக்சல் பாதிப்பு பகுதிகளில் அமைதியை ஏற்படுத்துவதற்காகவும், வளர்ச்சியை மேற்கொள்ளவும் அரசு முழு உறுதிபூண்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை குற்றச்செயலால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதிமன்றம் உத்தரவிட்ட தொகைக்கும் கூடுதலாக, தலா 25 லட்சம் ரூபாய் நிவாரணத் தொகை உயர்த்தி வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட பெண்கள், தைரியமாக முன்வந்து புகார் அளித்தது மட்டுமல்லாமல், நீதிமன்ற விசாரணைக்கும் ஒத்துழைப்பு அளித்ததன் அடிப்படையிலேயே குற்றவாளிகளுக்கு தண்டனை கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

துணிச்சலுடன் போராடிய பெண்களின் தைரியத்தைப் பாராட்டும் வகையில் நீதிமன்றம் உத்தரவிட்ட மொத்த நிவாரணத் தொகையான 85 லட்சம் ரூபாய்க்கும் கூடுதலாக, இந்த நிவாரணத் தொகை உயர்த்தி வழங்கப்படும் என்று அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் நோய்த் தடுப்பு நடவடிக்கையாக 99 சதவீதம் அளவிற்கு தடுப்பூசி செலுத்தப்படுவதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னை தியாகராய நகரில் நகர்ப்புற சுகாதார மற்றும் நலவாழ்வு மையங்களில் தடுப்பூசி சேவைகள் விரிவாக்கத்தை அவர் தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர். மாநிலத்தில் 36 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 37 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள், 255 வட்டம், மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகள், 2 ஆயிரத்து 256 ஆரம்ப சுகாதார நிலையங்களில் தடுப்பூசி செலுத்தப்படுவதாக கூறினார்.

அரசு மருத்துவக் கல்லூரிகளில் மருத்துவர்கள் காலிப் பணியிடம் நிரப்பப்பட்டுள்ளதாகவும் திரு. மா. சுப்பிரமணியன் குறிப்பிட்டார்.

<<<<>>>>

சென்னையில் சைதாப்பேட்டை முதல் தேனாம்பேட்டை வரை அமைக்கப்பட உள்ள உயர்மட்டப் பாலத்திற்கான இரும்புத் தூண்கள் உள்ளிட்டவற்றின் தரம் மற்றும் அளவுகளை மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு ஆய்வு செய்தார்.

இதற்காக மும்பையில் வாடா என்னும் இடத்தில் இந்த கட்டுமானப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்பட்டறைக்கு சென்ற அவர், இப்பொருட்களின் உற்பத்தி குறித்து கேட்டறிந்தார்.

சைதாப்பேட்டை முதல் தேனாம்பேட்டை வரை 3 புள்ளி இரண்டு பூஜ்ஜியம் கிலோ மீட்டர் தூரத்திற்கு 15 மீட்டர் அகலத்திற்கு அமைக்கப்படும் இந்த உயர்மட்ட சாலை, 7 முக்கிய சாலை சந்திப்புகளை கடக்கும் வண்ணம் நிறுவப்படுவதாக மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

மாநிலத்தில் கடந்த 4 ஆண்டுகளில் விவசாயிகளுக்கு ஆயிரம் கோடி ரூபாய்க்கும் மேல் கடன் வழங்கப்பட்டுள்ளதாக பால்வளத்துறை அமைச்சர் திரு. மனோ தங்கராஜ் கூறியுள்ளார்.

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பால் உற்பத்தியாளர் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டத்தில் அவர் பங்கேற்றார்.

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தின் சார்பாக 34 சங்கங்களுக்கு பால் தர பரிசோதனைக் கருவி 35 பயனாளிகளுக்கு கறவை மாடு வாங்குவதற்கான கடன் தொகைக்கான காசோலைகளையும் அவர் வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர். பால்வளத்துறையின் மூலம் கறவை மாட்டுக் கடன், பராமரிப்புக் கடன், ஊக்கத்தொகை உள்ளிட்ட திட்டங்கள் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

நடப்பாண்டு பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு கறவை மாட்டுக் கடன் அதிக அளவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இதை விவசாயிகள் பயன்படுத்திக் கொண்டு பால் உற்பத்தியை அதிகரிக்க முன்வர வேண்டும் என்றும் திரு. மனோ தங்கராஜ் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

நாடு முழுவதும் பல்வேறு ரயில் நிலையங்கள் அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் திண்டுக்கல் மாவட்டம் பழனி ரயில் நிலையத்தில் நடைபெற்று வரும் இப்பணிகளை மதுரைக் கோட்ட ரயில்வே மேலாளர் திரு. சரத் ஸ்ரீவத்சவா ஆய்வு மேற்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<>>>

நீலகிரி மாவட்டம் உதகை அரசு தாவரவியல் பூங்காவில் மலர்க் கண்காட்சியை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்.

ஆயிரக்கணக்கான பூந்தொட்டிகள் மூலம் பல்வேறு வகையான மலர்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<>>>

தமிழகத்தில் விவசாயிகளின் நலன் கருதி பச்சைப் பயறு கொள்முதல் அளவை அதிகரிக்க வேண்டும் என்று பாமக தலைவர் திரு. அன்புமணி ராமதாஸ் மாநில அரசை வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாநிலத்தில் ஆயிரத்து 440 டன் பச்சைப் பயறு மட்டுமே ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் மூலம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதால் பெரும்பாலான விவசாயிகள் தாங்கள் விளைவித்த பச்சைப் பயரை விற்க முடியாமல் இருப்பதாகக் கூறியுள்ளார்.

இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களின் துயர் துடைக்க பச்சைப் பயரை உச்சவரம்பின்றி கொள்முதல் செய்ய வேண்டும் என்றும் திரு. அன்புமணி ராமதாஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<>>>

நீலகிரி, ஈரோடு, தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா பகுதிகள் மற்றும் குமரிக் கடல் பகுதிகளிலும், தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகளிலும் அடுத்த 4 நான்கு நாட்களுக்கு சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்குச் செல்ல வேண்டாம் என்றும் வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

ரஷ்யா – யுக்ரைன் இடையேயான அமைதிப் பேச்சுகள் துருக்கி தலைநகர் இஸ்தான்புல்லில் இன்று நடைபெறுகிறது.

<<<<>>>>

காஸாவின் வடக்கு மற்றும் தென் பகுதியில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் சுமார் 70 பேர் கொல்லப்பட்டனர்.

<<<<>>>>

மத்திய பணியாளர் மற்றும் பயிற்சித் துறையின் சார்பில் தன்னார்வ ரத்ததான இயக்கத்தை மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

மனித உரிமைகள் குறித்த குறும்பட போட்டியில் கலந்துகொள்ள விரும்புவோர் ஆகஸ்ட் மாதத்திற்குள் தங்களது குறும்படத்தை சமர்ப்பிக்குமாறு தேசிய மனித உரிமைகள் ஆணையம் அறிவித்துள்ளது.

<<<<>>>>

ஜெர்மனியில் நடைபெற உள்ள பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான போட்டிகளில் பங்கேற்கும் 12 வீரர்களுக்கு மாநில அரசின் சார்பில் 32 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

<<<<>>>>

ராணிப்பேட்டை மாவட்டம் காவனூரில் நடைபெற்ற சிறப்பு மக்கள் தொடர்பு திட்ட முகாமில் 365 பயனாளிகளுக்கு ஆட்சியர் திருமதி சந்திரகலா நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

<<<<>>>>

தென்காசி மாவட்டம் ஆனைகுளம் ஊராட்சியில் நடைபெற்ற மனுநீதி நாள் முகாமில் 84 பேருக்கு ஒரு லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திரு. கமல் கிஷோர் வழங்கினார்.

<<<<>>>>

திருப்பத்தூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி விளையாட்டு மையத்தில் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் நாளை நடைபெற உள்ளது.

<<<<>>>>

புதுக்கோட்டை மாவட்டம் முள்ளூர் பசுங்குளம் கண்மாய் வரத்து வாய்க்காலை தூர்வாரும் பணியை ஆட்சியர் திருமதி அருணா ஆய்வு செய்தார்.

<<<<>>>>

கள்ளக்குறிச்சி அருகே வானாபுரம் கூட்ரோடில் 75 லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட உள்ள நூலக கட்டடத்திற்கான இடத்தை ஆட்சியர் திரு. எம்.எஸ். பிரசாந்த் ஆய்வு செய்தார்.

<<<<>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகளின் பதக்கப்பட்டியலில் தமிழகம் 5ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளது.

இதில் தமிழகம் இதுவரை 15 தங்கம், 20 வெள்ளி உட்பட 63 பதக்கங்களை வென்றுள்ளது.

தில்லியில் இன்று நடைபெற உள்ள ஜிம்னாஸ்டிக் போட்டியின் இறுதிச் சுற்றுடன் கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டி நிறைவடைகிறது.

<<<<>>>>

தாய்லாந்து ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் தருண் மனப்பள்ளி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் அவர், 21-19, 21-16 என்ற செட்கணக்கில் மலேசியாவின் ஜஸ்டின் ஹோ-வை வென்றார்.

<<<<>>>>